நீதித்துறை நடுவர் எண்.3 நீதிமன்றம், திருப்பத்தூர் வேலூர் மாவட்டம்

**சி.சி.எண்.150/2019**

2021ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 23ம் நாள் வியாழகிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா.6 வது நபரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது

| | | | | |
|---|---|---|---|---|
| **பெயர்** | **:** | **வினோத்குமார்** | **வயது** | **: 34** |
| **த/பெ.** | **:** | **தேவேந்திரன்** | **தொழில்** | **: முதல்நிலை காவலர்** |
| **ஊர்** | **:** | **காட்பாடி** | **சமயம்** | **:** |
| **வட்டம்** | **:** | **வேலூர்** | **சாதி** | **:** |
| **மாவட்டம்** | **:** | **வேலூர்** | | |

**முதல் விசாரணை:-**

நான் தற்போது காட்பாடி இருப்புபாதை காவல் நிலையத்தில் முதல்நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பாக 2017ம் வருடம் ஜோலார்பேட்டை இருப்புபாதை காவல் நிலையத்தில் பணிபுரிந்த போது, தொடர்ந்து திருடு நடபதற்காக ஜோலார்பேட்டை இருப்புபாதை கிரைம் குழுவில் என்னை பணி

அமர்த்தினார்கள். ஜோலார்பேட்டை, காட்பாடி ரயில்வே நடைமேடைகளிலும் Running ரயில் வண்டிகளில் பெண்கள் செல்லும் கோச்சில் கண்காணிக்கும் படி கூறியிருந்தார்கள். 16.10.2017ம்தேதி மதியம் 01.00 – 02.00 மணியளவில் எங்கள் கிரைம் குழு 2ம் எதிரியை காட்பாடி ரயில்வே பிளாட் பாரத்தில் எண். 2 மற்றும் 3ம்

பார்த்தோம். புகார்தாரர் வாக்குமூலத்தின் அடிப்படையிலும் CCTV Footage அடிப்படையில் 2ம் எதிரியை சந்தேகத்தின் அடிப்படையில் காவல் ஆய்வாளர் பிடித்து விசாரித்த போது சில குற்றங்கள் செய்ததாக ஒப்புக்கொண்டார். 2ம் எதிரியை காவல் ஆய்வாளர் விசாரித்து கைது செய்து காவல் நிலையம் அழைத்துச்சென்றார்கள். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

எ.த.கு.வி:-

கிரைம் குழுவில் யார் இருந்தோம் என்றால் நானும், இளங்கோவன், மற்றும் காவல் ஆய்வாளர் இருந்தோம் காட்பாடியில் யார் இருந்தார்கள் என்று ஞாபகமில்லை. குழு அமைத்த தேதி தெரியுமா என்றால் குறிப்பிட்டு ஞாபகமில்லை.2ம் எதிரி காட்பாடி ரயில்வே பிளாட் பாரத்தில் எண். 2 மற்றும் 3ம் பிளாட் பாரத்தில் போகி எண், எதிர்

திசையில் போகி எண் மற்றும் அங்கு அங்கே இருந்த °Post நம்பர் ஏதாவது ஞாபகம்

உண்டா என்றால் ஞாபகமில்லை. South end மட்டும் ஞாபகம் உள்ளது. ஒப்புதல் வாக்குமூலத்தை யார் தயார் செய்தார்கள் என்றால் ஆவணம் தயாரித்த போது நான் இல்லை விசாரித்து காவல் நிலையம் அழைத்து சென்றபோது நான் இருந்தேன். தொடர் திருட்டு நிகழ்வுக்காக இந்த வழக்குகளை முடிக்க வேண்டும் என்பதற்காக தவறு செய்யாத எதிரிகளின் மீது புள்ளிவிபர கணக்கிற்காக மேல் அதிகாரியின் பொய் புகார் வழக்கிற்கு அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் எதிரியை சொன்ன நேரத்திலும் சொன்ன தேதியில் பார்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

ம.வி:-

இல்லை